**கவனிக்க.-** *2008.08.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1566 - 2008 සැප්තැම්බර් 05 වැනි සිකුරාදා - 2008.09.05**

*1566 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 964 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 968 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, செத்தெம்பர் 12 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஓகத்து 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ‘‘புதிய சேர்வாளர்கள்’’ ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் உப பொலிஸ் பரிசோதகர், (விசேட அதிரடிப்படை) எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2008.10.06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற் குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880 - 8 x 3,840 - 17 x 4,500 - ரூபா 3,18,300.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும்.

(அ) விசேட கடினப்படி :

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600

(ஆ) இணைந்த படிகள் :

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 12,000
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 4,000

(அ) இலவச பயண வசதி
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்.
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.
(ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்.
(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற் காகவும் வெகுமதியாக பணம் வழங்கப்படும்.
(ஊ) விசேட அதிரடிப்படை அடிப்படை பயிற்சி யின் பின்பு விசேட அதிரடிப்படைப் பிரிவில் சேவை செய்யும் காலம் வரையும் அதில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக கொடுக்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவு திகதியில் 18 - 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோ கத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசி திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்தியிருக்கவும் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க. பொ. த. (சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்திய டையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா.தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) கீழ் வரும் தகைமைகளை கொண்ட விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும் (சான்றிதழ்கள் இருத்தல் அவசியம்) :-

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத கால கணனி பாட நெறி உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடத்திட்டத்துடன்,

* அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இரு வருட கால மின்னியல் பாட நெறியில் டிப்ளோமா பட்டத்துடன் அதே நிறுவனத்தில் குறைந்தது இரு வருட காலப் பிரயோகப் பயிற்சியும்,

* தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியும் அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மோட்டார் தொழில்நுட்ப பயிற்சி நெறியும் அதே நிறுவனத்தில் மூன்று வருட வேலை அனுபவமும்.

(ஈ) *பௌதிக தகைமைகள் :*
*உயரம் 5 அடி 6 அங்குலம் (ஆகக்குறைந்தது)*
*மார்பு 32 அங்குலம் ஆகக்குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)*

**குறிப்பு**: *சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின் படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.*

(உ) *பார்வை தொடர்பான தேவை.*- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

(ஊ) *பிற தகைமைகள்.*- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவு செய்யபட்டும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற் பயிற்சிகளில் பங்கு பற்றலாம். அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) மீற்றர் - 1500 | - 6 நிமிடங்கள் 20 விநாடிகள் |
| (2) சிற்றப் (Situp) | - 30 விநாடியில் 15 தடவைகள் |
| (3) டிப்ஸ் (Dips) | - 30 விநாடியில் 15 தடவைகள் |
| (4) ஸ்கொட் த்ரஷ் (Scott thrush) | - 30 விநாடியில் 20 தடவைகள் |

பரீட்சையில் சித்தியெய்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர் நேர்முக பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்து பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளன:-

(1) 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்

(2) பொது அறிவும் பொது நுட்பமும் - 1 மணித்தியாலம்.

6. **வைத்திய பரீட்சை**.- ஆகக் கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கபப்டுவர்.

7. **பின்னணி விசாரணை** :

(அ) விண்ணப்பதாரியின் நன்னடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள் ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட்சேர்ப்பதற்கு தகைமை அற்றதாகும் ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்**.- பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதயிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெற்றல் வேண்டும்.

2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்கத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சிடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/விபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்** :

(அ) நியமனம் 3 ஆண்டுகள் காலத்துக்கு தகுதிகாண் அடிப் படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக்கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களம் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவ ராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆந் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத் திலேயே பணியாற்றவேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத் தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகூர் நிலை உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (அ) வின் ஆரம்பத் தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நிபந்தனைகளுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது:-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்குப் புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்)
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) எனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 3" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

ஜயந்த விக்கிரமரட்ண,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*உப பொலிஸ் பரிசோதகர் பதவி (விசேட அதிரடிப்படை)*

1. (அ) முழுப் பெயர் :-----
(தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண் டும்)

(ஆ) பெயர் :-----
(முதல் எழுத்துக்களுடன்)

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----
மாகாணம் :-----

5. (அ) தற்போதைய முகவரி :-----

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----

(இ) நிரந்தர முகவரி :-----

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----
தேர்தல் மாவட்டம் :-----

6. (அ) தேசிய இனம் :-----

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா? பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது : -----
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

8. உயரம் :- அடி :----- அங்குலம் :-----

9. கல்வித் தகைமைகள் :-----
(சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா? :-----

11. திருமணம் ஆனவரா?/ திருமணம் ஆகாதவரா? :-----

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா? : -----

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா? :-----

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக் கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :-

(1) -----

(2) -----

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக : -----

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக :-----

16. (அ) தற்போதைய படைதாங்கு சேவையில் இருந்திருத்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? :-----
(அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.)

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியுள்ளீர்களா, அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக :-----

19. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டணை வழங்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----

9-06

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2008

## Competitive Examination to Recruit External Applicants for the Vacancies in Agrarian Development Officer Service – 2008

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகள் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள மொழியில் மாற்றங்கள் செய்வதற்கு பின்னர் இடமளிக்கப்படாது.

1. **தகைமைகள் :**

(1) 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதாகும். சகல விண்ணப்பதாரர்களும் தேவைப்படும் சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

3. **பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்.**- (சம்பளத் தொகுதி MN-5). ரூபா 15,785 – 10 x 290 – 15 x 325 – 11 x 400 – ரூபா 27,960 (மாதாந்தம்)

4. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படவேண்டிய முறை.**- விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 தொடக்கம் 10 வரையிலான பந்திகள் முதலாவது பக்கத்திலும் ஏனைய பந்திகள் இரண்டாவது பக்கத்திலும் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு, அதற்குரிய தகவல்களை தனது சொந்த கையொப்பத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பப் படிவங்களும் பூரணமற்ற நிலையில் உள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனளிக்கக்கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய உள்ளதா என்பது பற்றி விண் ணப்பதாரியினால் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு இல்லையெனில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள, பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் அதற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிலும் அதற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள வாறு ஏ4 (21 செமீ x 29 செமீ) அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகப்படுத்தி தயாரித்தல் வேண்டும்.

உரிய முறையில் விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப் படாமையால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்ளல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

5. **விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி.**- பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை 10.10.2008 ஆந் திகதிக்கு முன்னர் ''கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், த. பெ. இல. 537, கொழும்பு 07'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் மட்டும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

6. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.**- அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர், சமாதான நீதவான், சமய வழிபாட்டுத்தல மதகுரு ஒருவர், சட்டத்தரணி ஒருவர் அல்லது பொ. நி. சு. 6/2006 இற்கமைய 22,935 இற்குக் குறையாத மாதாந்த சம்பளம் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. **பிழையான தகவல்களைச் சமர்ப்பித்தல்.**- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என்பது பற்றி நியமனம் கிடைப்பதற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் தெரியவருமாயின், விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். வேணுமென்றே பிழையான தகவல்கள் வழங்கப் பட்டிருப்பதாகவும் உண்மையான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பதாகவும் நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

8. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, அப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிக புள்ளிகளின்படி தகைமையானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

பரீட்சை 2 வினாப்பத்திரத்தைக் கொண்டதாகும் :

I உளச்சார்புப் பரீட்சை – 1 1/2 மணித்தியால வினாப்பத்திரம்,
II நுண்ணறிவுப் பரீட்சை – 1 1/2 மணித்தியால வினாப்பத்திரம்.

உளச்சார்புப் பரீட்சை.- இவ்வினாப்பத்திரம் மூலம் சுருக்கமான விடயங்கள் பல விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும். கருத்தை ஒரு வசனத்தில் உரைத்தல், கோடிட்டுள்ள சொற்களுக்கான விளக்கம், மிகவும் பொருத்தமான கூற்றுக்களை தெரிவுசெய்தல், வினாக்களுக்கு சரியான விடையளித்தல், நீண்ட பந்தியை சுருக்கி எழுதுதல் என்பன இவ்வினாப்பத்திரத்தில் அடங்கும்.

நுண்ணறிவுப் பரீட்சை.- இவ்வினாத்தாள் பல் தெரிவு வினாக்களைக் கொண்டது. வாதப் பொருத்தமுடைய பகுப்பாய்வு செய்து தீர்மானமெடுக்கும் விண்ணப்ப தாரர்களின் ஆற்றலை அளவிடல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

9. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ரூபா 300 பெறுமதியான காசுக் கட்டளையை அல்லது தபால் கட்டளையொன்று "கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் பெயரில்" (கறுவாத்தோட்டம் தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய வகையில்) பெற்று தங்கள் விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். எந்தவொரு காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

10. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் ஊகத்துடன், முடிவின் பேரில் 10.10.2008 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதி அட்டை அல்லது அழைப்புக் கடிதம் வழங்குவது, விண்ணப்பதாரர் இப்பதவிக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்வதற்காக கருத மாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து, உரிய அறிவித்தலின்படி தகைமைகள் உள்ளனவா எனப் பரீட்சித்துப் பார்க்கும்போது தேவையான உரிய தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து, அவ்விண்ணப்பதாரருக்கு நியமனம் கிடைப்பதற்குரிய உரிமைகள் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டதும், அதுபற்றிய அறிவித்தலொன்று புதினப் பத்திரிகைகளில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்கள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தில் மற்றும் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதியையும், பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டையும், கொழும்பிற்கு புறநகரப் பிரதேசம் எனில் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது வேண்டுகோள் கடிதத்தையும் வைத்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தல் மிகவும் உசிதமாகும்.

11. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது, பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

12. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் பொதுப் பரீட்சை விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கடப்பாடுடையவர்களாவர். அவ்விதிகளை மீறின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனை களுக்கும் உட்படுவதற்கு நேரிடும்.

13. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலுக்குரிய அல்லது இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக, பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

கமலா உயன்வத்த,
பதில் செயலாளர்,
விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு.

விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு,
பத்தரமுல்ல,
2008, ஓகத்து 15.

மாதிரி விண்ணப்பப்பத்திரம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் வெற்றிடங்களுக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2008**

Competitive Examination to Recruit External Applicants for the Vacancies in Agrarian Development Officer Service – 2008

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. (i) முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களு டன் பெயரை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும் :----.
   உதாரணம் : SUNIL A. B. :----.
   (ii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
3. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
5. பால் : ☐
   பெண்-1, ஆண்-0
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
6. விவாகமானவரா? /விவாகமாகாதவரா ? : ☐
   (விவாகமாகாதவர்-1/ விவாகமானவர்-2)
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
7. (i) பிறந்த திகதி :
   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
   10.10.2008 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐
   (ii) இலங்கைப் பிரஜையாயின் பிறப்பின் மூலமாக/ பதிவின் மூலமா ? :----.
   (iii) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
   ☐☐☐☐☐☐☐☐☐☐

8. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :

(அ) பெற்றுள்ள பட்டம் :----.
பட்டத்திற்குரிய பாடங்கள் :----.
பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.
பட்டம் பெற்றுள்ள பல்கலைக்கழகம் :----.
(ஆ) ஏனைய தகைமைகள் :----.

9. தாங்கள் ஏதேனுமொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெற்றிருப்பின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடவும் :----.

10. காசுக் கட்டளை/தபால் கட்டளையின் இலக்கமும் திகதியும் :----.

| காசுக் கட்டளை/தபால் கட்டளையை இக்கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். |
|---|

11. இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ் ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளின்படி என்னால் பிழையான தகவல்கள் தரப்பட்டிருப்பின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சை உரிமையை இரத்துச்செய்ய முடியும் எனவும், நியமனத்திற்குப் பின்னர் அதுபற்றி தெரியவருமாயின், சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்றும் நானறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் நிபந்தனைகளுக்கும் நான் இணங்கியொழுகுவேன் எனவும் தெரிவித்துக்கொள் கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்**

இங்கு கையொப்பமிட்டுள்ள ........................................................ வசிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையை இடவும்.)

**தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ....................... ........... என்பவர் தற்போது இத்திணைக்களத்தில் ....................... ................. ............ ஆக நிரந்தர/தற்காலிக/அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படுத்தப் படவில்லை எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும் அப்பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுப்படுத்துவதுடன், விண்ணபத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன்/ சமர்ப்பிக்கவில்லை.

----,
திணைக்களத்தின்/நிறுவனத் தலைவரின்
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
திகதி :----.

9-350

---

**திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2008**

திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்கு மான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும், இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதி 2008 ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி எனவும், அவர்கள் மூன்றாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தை அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைத் திட்டம்**.- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :

(1) நிதிப் பிரமாணங்கள்/அலுவலக முறைமைகள் (2 மணித்தி யாலங்கள்) – 100 புள்ளிகள்

(2) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்) - 100 புள்ளிகள்

**குறிப்பு**.- (அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவையில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

(இ) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

3. **பாடங்கள் :**

(அ) நிதிப்பிரமாணங்கள்/அலுவலக முறைமைகள் (2 மணித்தி யாலங்கள்) – 100 புள்ளிகள் (பாட இல. 01) :

(1) இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு

(2) நிதி கட்டுப்பாடும், வருடாந்த மதிப்பீடுகளும்

(3) தாபனக்கோவையின் கட்டளைகளும், நிதிப்பிரமாணங் களும்

தாபனக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும் :

I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII

அரசாங்க நிதிப் பிரமாணங்களின் 1 ஆவது பாகம் (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த)

(4) அலுவலக முகாமைத்துவம்

(ஆ) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்) – 100 புள்ளிகள் (பாட இல. 02).- அபிவிருத்தி அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் வினாத்தாள் வடிவமைக்கப்படும். க. பொ. த. சாதாரண தர வினாத்தாள்களுக்குச் சமமான விதத்திலும், மொழி, அறிவு, கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணம், கிரகித்தல் என்பன உள்ளடக்கிய விதத்திலும் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.

4. **தகைமைகள்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடைய வராவார்கள்.

5. **விண்ணப்பப்படிவம் அனுப்பவேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரகாரம், ஒரு ஏ4 அளவுத் தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 01 இல் இருந்து 07 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 08 இல் இருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

விசேட விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்களும் மற்றும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். அன்றேல் அவை நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்குமிடத்து விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவை சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பங்களில் ஆங்கிலத்திலேயே இடம்பெற வேண்டும்.

(ஆ) பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி களிடமிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :

| பரீட்சைக் கட்டணம் | ரூபா | சதம் |
|---|---|---|
| (அ) முதற்தடவை தோற்றுவதற்கு | இலவசம் | |
| (ஆ) முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப்பரீட்சைக்கும் | 115 | 0 |
| (இ) ஒரு பாடத்திற்கு | 75 | 0 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் நன்றாக ஒட்டிவிடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோ கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

(இ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 07, பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2008, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகவோ அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.

(உ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் திகதிக்குக் குறைந்தது 07 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை (தந்தி : 'பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை') என்ற முகவரிக்கு உடன் காலதாமதமின்றி தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும தகவல்களையும் அறிவித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பியவுடன் இலங்கை பரீட்சை திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகையில் அறிவிப்பு ஒன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளி இடம் என்றால் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கையின் நிழற்பட பிரதி என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) முழு அஞ்சல் முகவரி ;
(iv) விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி ;
(v) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி (சம்பந்தப்பட்டது எனில்).

7. **அடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் (ஒவ்வொரு பாடத்தின்போதும்) மேற்பார்வையாளர் திருப்திப்படும்

வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு.

மேற்கூறிய ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியின் தகைமையை ரத்து செய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு. அத்துடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று உறுதிப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன் கூடிய அனுமதிப்பத்திரம் மேற்பார்வையாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள். பரீட்சை ஆணையாளர் விதிக்கும் அனைத்து சட்டங்களுக்கும் விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்வாறான சட்டம் மற்றும் விதி மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு பரீட்சார்த்தி முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

9. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிவின்படி முடிவு செய்யப்படும்.

தாரா விஜேதிலக,
செயலாளர்,
திட்ட அமுலாக்கல் அமைச்சு.

டவர் 5, தட்டு 12,
மத்திய வங்கி கட்டிடம்,
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திட்ட அமுலாக்கல் அமைச்சின்கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2008**

First Efficiency Bar Examination for Development Officer & Project Officers Recruited under the Ministry of Plan Implementation – 2008

**குறிப்பு**.- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

[ ]
(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் : [ ]
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தினை கூட்டில் இடுக.)

1. (i) சொந்தப் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
(முதலெழுத்துக்கள் கடைசியில் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) உதாரணம் : SAMAN S. A. :----.
(ii) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. (i) அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) அலுவலக முகவரி, அனுமதி அட்டை அனுப்பப்படும் விலாசம் (பெரிய ஆங்கில எழுத்தில்) :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4. கருத்திட்ட/ அபிவிருத்தி அலுவலர்களாக கடமையேற்ற திகதி (கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக.) :----.

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் விண்ணப்பிக்கும் பாடங்கள் :-
(i) பாடம் :----. பாட இலக்கம் [ ]
(ii) பாடம் :----. பாட இலக்கம் [ ]

6. நீங்கள் முதற் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :----.

7. முதல் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்.-

(பரீட்சையின் முழுக்கட்டணம் ரூபா 115. ஒரு பாடத்திற்கு கட்டணம் ரூபா 75. பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு 4000-20-03-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியை தன்னுடன் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

[ பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். ]

8. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் யான் உறுதி செய்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாகக் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி .................................................. எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2008 ஆம் ஆண்டு .......................... மாதம் ........................ ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

நான் -

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,
(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.
(iii) பரீட்சார்த்தி சரியான பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

9-402

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்;ர் ரூ. ச. | வெளியுூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்;ர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2008**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2008 |
| | | வெள்ளி | 12.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2008 |
| | | வெள்ளி | 19.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2008 |
| | | வெள்ளி | 26.09.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2008 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2008 |
| | | வெள்ளி | 10.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2008 |
| | | வெள்ளி | 17.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.10.2008 |
| | | வெள்ளி | 24.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2008 |
| | | வெள்ளி | 31.10.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2008 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2008 |
| | | வெள்ளி | 14.11.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2008 |
| | | வெள்ளி | 21.11.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2008 |
| | | வெள்ளி | 28.11.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.